# வரலாற்றுச் சுவடிகள்

பதிப்பு

த. தனஞ்செயன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூன் - 2008

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
எண்: 53010721

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு**
பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை - 600 005

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்றுவரும் "சுவடியியலும் பதிப்பியலும்" பட்டயப் பேற்றிற்காக "**வரலாற்றுச் சுவடிகள்**" என்னும் தலைப்பிலான மூன்று சுவடிகளை **த. தனஞ்செயன்** அவர்கள் எனது மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இப்பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்

நாள் :

இடம் : சென்னை - 5

(வீ. அரசு)

# பதிப்பாளர் உறுதிமொழி

**த. தனஞ்செயன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை - 600 005.

**"சுவடியியலும் பதிப்பியலும்"** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப் பெறும் **"வரலாற்றுச் சுவடிகள்"** எனும் தலைப்பில் மூன்று சுவடிகளைக் கொண்டு பதிப்பிக்கப்பட்ட இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்

பதிப்பாளர்

**(த. தனஞ்செயன்)**

நாள் :

இடம் : சென்னை - 5

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 13 |
| | பதிப்பிக்கப்பெறும் சுவடிகள் | |
| 1. | தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற் சோழன் வரலாறு | 29 |
| 2. | ஜைன முனிவர்கள் சந்ததி வரலாறு | 37 |
| 3. | செங்கனாச்சேரி காட்டு மனிதர் வரலாறு | 44 |
| | பார்வை நூல்கள் | 52 |

## நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடத்தப்பெறும் "சுவடியியலும் பதிப்பியலும்" என்னும் பட்டயக் கல்வி பயில வாய்ப்பளித்து அத்துறை தொடர்பான செய்திகளை மாறுபட்ட கோணத்தில் பயிற்றுவித்ததுடன் சுவடிகளைப் பதிப்பிக்க நெறியாளராகவும் அமைந்து என்னைப் பல நிலைகளில் ஊக்குவித்த துறைத்தலைவரும் பேராசிரியருமான முனைவர் வீ. அரசு அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் தொடர்பான கல்வியினை எனக்கு பயிற்றுவித்து பதிப்பு நெறிமுறைகளைக் கூறி என்னை வழி நடத்திய துறை விரிவுரையாளரான முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இப்பட்டயக் கல்வி பயின்ற காலத்தில் சுவடியியல் தொடர்பான நூல்களைக் கொடுத்து உதவிய துறை விரிவுரையாளர்களான முனைவர் ஆ. ஏகாம்பரம், முனைவர் கோ. பழனி ஆகியோருக்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பதிப்பிற்குரிய சுவடிகளைக் கொடுத்து உதவிய அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காப்பாட்சியர்

இரா. சந்திரமோகன் மற்றும் நூலகத் தமிழ்ப் புலவர்களான ச. தியாகராஜன், நீ. அய்யனார் ஆகியோருக்கும் உதவியாளருக்கும் என் நன்றி என்றும் உரியது. மேலும் சுவடியினைப் படியெடுத்து பதிப்பிக்க அன்போடு உதவிய சகோதரி சு. சுஜா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

என்னுடைய முனைவர் பட்ட ஆய்வுடன் பட்டயக் கல்வியினையும் பயில அன்புடன் நெறிபடுத்தி வரும் முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்களுக்கும் எனது குடும்பத்தினருக்கும் இவ்வேளையில் மனம் நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

இப்பதிப்பேட்டை சிறப்பான முறையில் தட்டச்சு செய்து கொடுத்து உதவிய திரு இல. கணேசன் அவர்களுக்கும் புத்தக கட்டுமானம் செய்து கொடுத்த ஜெ. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

அன்புடன்

**த. தனஞ்செயன்**

# பதிப்புரை

ஒரு வரலாற்றை ஆவணப்படுத்தும் பொழுது அதனுடன் தொடர்புடைய தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் அதற்கு முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் துணைமைச் சான்றாதாரங்களாக சுவடிகள், செப்புப் பட்டயங்கள் உள்ளிட்டவை எடுத்துக்கொள்ளப்படுகின்றன. காலம் கடந்து நிலைத்து நிற்கக் கூடிய ஒரு வரலாற்றுடன் தொடர்புடைய புதிய சான்றுகள் கிடைக்கின்ற பொழுது அவ்வரலாற்றின் மீது கேள்விகள் எழுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது. அவ்வகையில் சோழர் மற்றும் ஜைனர்களுடன் தொடர்புடைய தாள் சுவடிகள் அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கண்டெடுக்கப்பட்டு இங்கு பதிப்பிக்கப்படுகின்றன.

இப்பதிப்பேட்டின் முதல் பகுதியாக அமைகின்ற முதற் சோழன் வரலாற்றைக் கூறும் சுவடியானது பல கேள்விகளை எழுப்புகின்றது. தமிழ் மண்ணில் மிகப்பெரும் அரசு நிர்வாகத்தைச் செய்து காலத்தால் அழியாப் புகழ் பெற்ற சோழ மரபு குறித்த சில தரவுகளை இச்சுவடி சுட்டுகின்றது. அத்தரவுகள் சோழ வரலாற்றில் இதுவரை கூறப்படாத வகையில் அமைந்துள்ளன. இச்சுவடியானது சோழ மரபானது வடநாட்டில் அயோத்தியா புரிக்கு அருகில் தோன்றியது எனக் குறிப்பிடுகின்றது. மேலும் இராமாயணத்தில் முதன்மைப் பாத்திரமாக இடம்பெற்றுள்ள இராமர் இராமேஸ்வரத்தில் லிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து அதன் பெருமையை

வடநாட்டில் சென்று கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இராமரின் சொல்லைக் கேட்டு சேது யாத்திரை என்ற பெயரில் புறப்பட்டு வந்த முதலாம் சோழ மன்னனாகிய தாய்மான் நள்ளி என்பவன் திருச்சிராப்பள்ளியை அடைந்து அங்கிருந்த காடுகளை அழித்து நாடாக்கியதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் முதற்சோழனின் காலத்தை அடுத்து ஆட்சிக்கு வந்த அவன் மகன் விண சோழன் என்பவன் காவிரியின் குறுக்கே அணை கட்டி விண்ணாறு என்ற ஆற்றை உருவாக்கியதாகவும் அவனுடைய மகன் (காவேரிச் சோழன்) காவிரிக் கரைக்கு கடல்வரை கரை எழுப்பியதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் சோழ மரபானது சங்க காலச் சோழர், பிற்காலச் சோழர் என இரண்டாகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. இவ்விரண்டு சோழர் மரபிலும் இச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள சோழனின் பெயர் இடம்பெறவில்லை. மாறாகச் சங்க காலச் சோழ மரபின் முதல் சோழ மன்னனாக உருவப் ப.்.றேர் இளஞ்சேட் சென்னி என்பவனையும் பிற்காலச் சோழ மரபின் முதல் சோழ மன்னனாக விசயாலனையும் வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் இச்சுவடியில் குறிப்பிடும் பெரும்பாலான செய்திகள் தமிழக வரலாற்று ஆய்வாளர்களின் - கூற்றுக்கு மாறானவையாகவே உள்ளன. சுவடியில் குறிக்கப்படும் இராமர் இடம் பெறும் கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ளவைகள் உண்மை யானவையா என்பதில் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அது வெறும் கற்பனைக் கதை

என்று ஒரு சாராரும், உண்மை நிகழ்வின் சாரம் என மற்றொரு சாராரும் குறிப்பிடுகின்றனர். கம்பராமாயணத்தின் முதன்மைப் பாத்திரமான இராமரும் இச்சுவடி குறிப்பிடும் இராமரும் ஒருவரா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இச்சுவடி குறிப்பிடும் இராமர் சங்ககாலச் சோழர் காலத்தில் வாழ்ந்தவர் என எடுத்துக் கொண்டால் அதற்கான எந்தக் குறிப்பும் வரலாற்று ஆய்வு நூல்களில் இல்லை. மாறாகச் சங்ககாலச் சோழ மரபிற்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத ஒரு பெயராகவே இச்சுவடி சுட்டும் தாய்மா நள்ளிச் சோழனின் பெயர் அமைந்துள்ளது.

பிற்காலச் சோழர் மரபின் தொடக்க காலத்தில் இராமர் வாழ்ந்ததாக எடுத்துக் கொண்டால் இராமாயணம் குறிப்பிடும் இராமரிலிருந்து இவர் வேறுபட்ட ஒரு இராமராக இருக்க வேண்டும். சோழ மண்டலம் முழுமையாக வளர்ச்சியுற்றதும் காவிரியின் குறுக்கே கொள்ளிடத்தில் அணை கட்டியதும் பிற்காலச் சோழர் மரபினரே என்பதைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் தெளிவாகச் சுட்டுகின்றன. உண்மை இவ்வாறு இருக்க தாய்மான் நள்ளிச் சோழன் என்பவன் காவிரியை கொள்ளிடத்தில் தடுத்து அணை கட்டியதாகவும் இவனுடைய வாரிசுகள் காவிரியை கடல் வரையில் கரை அமைத்து கொண்டு சென்றதாகவும் குறிப்பிடுவது முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக உள்ளது.

சோழ மரபு குறித்துப் பேசும் இச்சுவடியில் பயிர்த்தொழில் குறித்தும் கூறப்பட்டுள்ளது. காட்டினை அழித்து நாட்டை உருவாக்கிய இச்சோழன் முதல் ஆறு

வருட வேளாண் விளைபொருட்களைப் பயிர் செய்பவர்களே வைத்துக் கொள்ளவும் அதற்கடுத்த வருடங்களில் பத்தில் ஒரு பங்கு தொடங்கி இறுதியாக ஆறில் ஒரு பங்கு அரசுக்குரியதாகப் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனை வரலாற்றாய்வாளர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் ஆய்வு முடிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சுவடி குறிப்பிடுவது ஆய்விற்குரியதாக உள்ளது. 'தென்னிந்திய வரலாறு' எனும் நூலில் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள்,

> "பயிர்த்தொழில் வாணிகமும் அரசனுடைய வருவாய்க்கு முக்கிய ஆதாரமாயிருந்தன. விளைநிலத்தை மா என்றும் வேலி என்றும் அளந்து கணக்கிட்டார்கள். ஆனால், விளைவில் எத்தனையில் ஒரு பங்கு அரசனுக்குரியது என்பது எங்கும் துல்லியமாகக் கூறப்படவில்லை."

-ப-20, தென்னிந்திய வரலாறு, - I
(வரலாற்று முற்பட்ட காலம் முதல் விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி வரை.)

எனச் சோழர் காலத் தொழில் குறித்த தனது ஆய்வு முடிவைப் பதிவு செய்கின்றார். ஆனால் சுவடியோ பயிர்த்தொழிலில் அரசனுக்குரிய பங்கினை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. குறிப்பாக முதல் சோழ மன்னனாக இச்சுவடி சுட்டும் தாய்மான் நள்ளிச் சோழனின் பூர்வீகம் அயோத்திக்கு அருகில் இருந்ததாகவும் அங்கு சிறு

நிலப்பகுதிகளுடன் அவன் ஆட்சி செய்ததாகவும் குறிப்பிடுகின்றது. இது வரலாற்று ஆய்வு முடிவுகளுக்கு முற்றிலும் மாறுபட்டவையாக உள்ளமையை எளிதில் உணர முடியும். சோழ மரபானது முழுமையாக தென்னாட்டில் தோன்றி வளர்ச்சியுற்ற ஒரு மரபு என்பதற்கு ஒரு சில வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன.

வால்மீகியால் கி.மு. 100 ஐ ஒட்டிய காலகட்டத்தில் இயற்றப்பட்ட இராமாயணத்தில் சுக்கிரீவன் என்பவன் புண்டர சோழனின் நாடு, பாண்டிய நாடு, மற்றும் கேரள தேசங்களில் சீதையைத் தேடுமாறு குரங்கினங்களுக்குக் கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கால கல்வெட்டில் (Rock Edicts II & III) சோழர், பாண்டியர், கேரள புத்திரர்கள் தென்னாட்டை ஆண்டு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அடுத்த காலகட்டங்களில் கிடைக்கின்ற சங்ககாலச் சோழர்கள் பற்றிய குறிப்புகளும் சோழ மண்டலம் தமிழகப் பகுதியாகவே இருந்தமையை வலியுறுத்துகின்றன. இதற்கு சங்க இலக்கியங்கள் உட்பட பல்வேறு இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன. குறிப்பாக, சோழ மண்டலம் தென்னாட்டின் ஒரு பகுதிதான் என்பதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. சான்றாக, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள ஒரு தாள்சுவடியில் (டி. 3186).

> "ஸ்ரீ முஷ்னம் அருகே உள்ள வெள்ளாறுக்கும்,
> தொண்டைமான் சீமை வெள்ளாறுக்கும்
> இடையே உள்ளது சோழராசர்கள் சீமை."

என்று எழுதப்பட்டுள்ளமை சோழ மண்டலத்தின் பூர்வீகத்தை உறுதிசெய்யும் ஒரு ஆவணமாக உள்ளமையை அறிய முடியும். இத்தாள் சுவடி குறிப்பிடும் ஒரே ஒரு குறிப்பு மட்டும் சோழ மண்டலத்துடன் சிறிதளவு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

கொள்ளிடத்திலிருந்து பிரியும் காவிரியானது வெண்ணாறு, வெள்ளாறு, வெட்டாறு என ஐந்து நதியாகப் பிரிந்து சோழ நாட்டில் பாய்கின்றது. அதில் வெண்ணாறு என்ற ஆற்றின் பெயர் மட்டுமே சுவடியில் குறிப்பிடும் விண்ணாறு என்ற நதியின் பெயருக்கு ஒப்பானதாக உள்ளது. வேறு எந்த விதமான சான்றுகளும் தாய்மான் நள்ளிச் சோழனைச் சோழ வம்சத்தின் முதல் வேந்தன் எனக் குறிப்பிடும்படியாக இல்லை. இவை மட்டுமன்றி தாய்மான் நள்ளிச் சோழனின் வாரிசுகளாகக் குறிப்பிடப்படும் மண்ணளந்த சோழன் மற்றும் அவன் மகன் காவேரிக் கரைகண்ட சோழன் ஆகியோரின் பெயர்களும் சங்ககாலம் மற்றும் பிற்காலச் சோழர் மரபில் எங்கும் இடம்பெறவில்லை என்பதும் குறிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இவ்வாறு பல நிலைகளில் ஒரு வரலாற்றின் மீது பல்வேறு கேள்விகளை எழுப்புகின்ற இச்சுவடியானது மேலான ஆய்விற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்தின் படியாக இச்சுவடி பதிப்பிக்கப்படுகின்றது.

**தற்போதுள்ள மாவட்டப் பிரிவுகளின்படி சோழ மண்டலம்.**

1. தஞ்சை மாவட்டம் முழுவதும்
2. திருவாரூர் மாவட்டம் முழுவதும்

3. நாகை மாவட்டம் முழுவதும்

4. திருச்சிராப்பள்ளி மாவட்டம் முழுவதும்

5. பெரம்பலூர் மாவட்டம் முழுவதும்

6. கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை ஆகிய வட்டங்கள் நீங்கலான பகுதிகள்.

7. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றுக்கு வடக்குப் பகுதிகள்

8. தென்னாற்காடு மாவட்டம் முழுவதும்

9. விழுப்புரம் மாவட்டத்தில் சில பகுதிகள்

10. பாண்டிச்சேரி மாநிலத்தில் காரைக்கால், திருநள்ளாறு மற்றும் இவற்றை ஒட்டிய பகுதிகள்

11. சேலம் மாவட்டத்தில், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர் வட்டங்கள் நீங்கலான பகுதிகள்.

இவ்வெல்லைகள் குறித்த மாற்றுக் கருத்தும் அறிஞர்களிடையே உள்ளது.

இப்பதிப்பேட்டின் இரண்டாவது பகுதியில் “ஜைன முனிவர்கள் சந்ததி வரலாறு” எனும் சுவடி பதிப்பிக்கப் படுகின்றது. சமண சமயத்தினுடைய முதல் அருளாளராக விருஷபதேவர் என்பவர் சவணர்களால் கூறப்படுகிறது. ஐம்பொறிகளினால் உண்டாகும் ஆசை உள்ளிட்ட பற்றுகளை வெறுத்து வாழ்ந்தமையால் இவர் ஜீனன் என மக்களால் வழங்கப்பட்டார். திரு வி. கல்யாணசுந்தரம் அவர்கள் விருஷபதேவர் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்ததாகவும் அதன் காரணமாக இவர் அநாதி

எனப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். இவரை வழிபடுகின்ற மக்கள் அனைவரும் "ஜைனர்" எனப்பட்டனர். இது பின்னாளில் "ஜைன" சமயமாக வலுவாகக் காலூன்ற காரணியாக அமைந்தது. சமணர் (ஸ்ரமணர்) என்பது துறவிகள் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. பற்றற்ற வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்த காரணத்தினால் துறவிகள் என வழங்கப்பட்டனர். இவர்கள் சமண சமயக் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்காக அவ்வப்போது தோன்றி சமயப் பணியை மேற்கொள்வர். அதன் காரணமாக இவர்கள் தீர்த்தங்கரர்கள் என வழங்கப்பட்டனர். இத்தீர்த்தங்கரர்கள் இதுவரை இருபத்து நான்கு பேர் தோன்றியுள்ளதாகக் குறிப்பர். அவர்கள்,

1. விருஷபதேவர்
2. அஜிதநாதர்
3. சம்பவநாதர்
4. அபிநந்தனர்
5. சுமதி நாதர்
6. பதுமநாபர்
7. சுபார்சவநாதர்
8. சந்திரப் பிரபர்
9. புஷ்ப நாதர்
10. சீதள நாதர்
11. சிறீயாம்சநாதர்

12. வாசுபூஜ்யர்

13. விமல நாதர்

14. அநந்த நாதர்

15. தரும நாதர்

16. சாந்தி நாதர்

17. குந்து நாதர்

18. அர நாதர்

19. மல்லி நாதர்

20. முனிசுவர்த்தர்

21. நமிநாதர்

22. நேமிநாதர்

23. பார்சுவநாதர்

24. வர்த்தமான மகாவீரர்.

மேலும் சமண சமயம் குறித்த விரிவான ஆராய்ச்சியில் ஈடுபட்ட மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் சமண மத மானது பௌத்த மற்றும் ஆசீவக (மற்கலி) மதங்களுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றியது எனக் குறிப்பிடுகின்றார்.

சுவேதாம்பர, திகம்பர, ஸ்தானக வாசி சமணர் எனச் சமண சமயமானது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இவர்களில் சுவேதாம்பர சமணர், ஸ்தானக வாசி சமணர் ஆகியோர் வட இந்தியாவிலும் திகம்பர சமணர்கள் தமிழகத்திலும் அதிகமாகக் காணப்

படுகின்றனர். தமிழகத்தில் உள்ள திகம்பர பிரிவினர் ஜைனர் என்றும் சமணர், அமணர் என்றும் வழங்கப் படுகின்றனர். உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என ஒன்பது பொருள்கள் சமண சமயத்தவரால் நவ பதார்த்தம் எனக் கூறப்பட்டு அதனை விளக்கும் பிரச்சாரம் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைபெற்று வந்தது. இக்காலங்களில் அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் என்ற ஐந்து மாவிரதங்களை மறுத்து துறவு வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தனர். இவர்களின் துறவு வாழ்க்கைக்குக் குகைக்கோயில்கள், சமணப்படுக்கைகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் முதலானவை பெரும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலை யாமையை வலியுறுத்திய இவர்கள் ஒரு கட்டத்தில் மடங்கள் அமைத்தும் சமயப் பணியில் ஈடுபடலாயினர். இவ்வாறு பல நிலைகளில் ஈடுபட்ட சமணர்களின் சமயப்பணி குறித்து புதிது புதிதாகக் கண்டெடுக்கப்படும் கல்வெட்டுகள் மற்றும் சுவடிகள் அரிய பல தகவல்களைத் தெரிவிக் கின்றன. அவற்றை ஆய்வு செய்வதும் பதிப்பித்துப் பாது காப்பதும் சமய ஆராய்ச்சியில் இன்றியமையாத ஒன்றாக வேண்டப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து கண்டெடுக் கப்பட்ட "ஜைன முனிவர்கள் சந்ததி வரலாறு" எனும் தாள் சுவடி இங்குப் பதிப்பிக்கப்படுகின்றது.

வர்த்தமான சுவாமி மறைந்த பின்பு கலியுகம் பிறந்தது எனக் குறிப்பிடும் இச்சுவடி, வர்த்தமானருக்குப் பின்பு அவருடைய சீடர்களான கௌதமர் 12 ஆண்டுகளும், சதர்ம்மர் 12 ஆண்டுகளும், ஜம்பூநாமர் 915 ஆண்டுகளும் தர்ம உபதேசம் செய்து முக்தி அடைந்ததாகக் குறிப்பிடுகின்றது. அவர்களுக்குப் பின்பு அவர்களின் சீடர்களான,

1. விஷ்னு முனி

2. நந்தி மித்திறா

3. சுபராஜிதா

4. கோவர்த்தனா

5. பத்திரபாகு என இவர்கள் ஐந்து பேரும் நூறு ஆண்டுகள் தர்மோபதேசம் செய்கின்றனர். இவர்களுக்குப் பின்பு இவர்களின் சீடர் சந்ததிகளான, விசாலர், புரோஷிடலாச்சாரியார், ஷத்திரிய ஜெயசா வயநர், நாகசென சித்தாந்தர், திறாதி ஷென சித்தாந்தர், புத்திமான கங்கதேவர், தருமசேனர் எனப் பதினோரு சீடர்கள் தர்மோபதேசம் செய்கின்றனர். இதில் நான்கு பேரின் பெயர் விடுபட்டுள்ளது. இப்பதினோரு சீடர்களை அடுத்து இவர்களின் சீடர்களான நாஷேத்திர நாமர், ஜெயபாலர், பாண்டு, திர்வ சேனர், கம்சர் என ஐவர் தர்மோபதேசம் செய்கின்றனர். இவர்களையடுத்து இவர்களின் சீடர்களான சுபத்திரர், யசோபத்திரர், பத்திரபாகு, லோகாசாரியர் ஆகிய நான்கு பேரும் (114) நூற்றுப்பதினான்கு ஆண்டுகள் தர்மோபதேசம் செய்து சமயப் பணியில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு கலியுகத்தில் 60413 ஆண்டுகள் சென்ற பின்பு சுபத்திரர் முதலான நான்கு பேரின் சீடர் சந்ததிகளான வன்னியந்தரர், ஸ்ரீதேத்தர், இவதேத்தர், அரிய தேத்தர் ஆகியோரின் சீடர்களும் அவர்களின் வழிச் சீடர்களும் சிறிது காலம் சமயப்பணி செய்கின்றனர். அவ்வாறு செய்த பின்பு புண்டர வர்த்தண உர்த்திவ பத்திர பாகு ஆசாரியாருடைய சீடர் அரகபெலி ஆசாரியார் தம்முடைய அறிவு நுட்பத்தைக் கொண்டு கலியுகம் பிறக்கும் வருடத்தில் துரு ஆசாரங்களுக்குக் கேடு விளையப் போகிறது என முடிவு செய்கிறார். இவ்விடத்தில் சுவடியில் ஐந்து அடியில் ஒரு சமஸ்கிருதக் காப்புரை இடம் பெற்றுள்ளது. இக்காப்புரையின்படி செனன சங்கம், வீர சங்கம், நந்தி சங்கம், தேவ சங்கம் என நான்கு சங்கம் அமைத்து அந்நான்கு சங்கத்திற்கும் தலா நான்கு ஆசாரியார்களை நியமணம் செய்து அவர்கள் மூலமாகச் சமயப் பணி நடைபெற உத்தரவிடுகிறார்.

இக்காலத்தில் அருகபெலி ஆசாரியாரின் சீடர் மா...னந்தா சாரியார் அற்றாஷ்ட தேசத்தில் கிரிநகர் புரத்து ஊரைச் சேர்ந்த சியந்தகிரியில் உள்ள சந்திரகவாட குகையில் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது இவரின் சீடரான தர்ம்ம சேனாசாரியார் தன்னுடைய சீடர்களான சந்திரகள புஷ்பர், தேத்தா சாரியார், பூதபலி ஆசாரியார் ஆகிய மூவருடன் தடாகபுரத்தில் தர்மோபதேசம் செய்து வாழ்கின்றனர். இவர்களின் சமகாலத்தில் கருண தேசம் என்கிற தேசத்தில் யதி விஷமா நாரியார் சினபா நித புரத்தில் தன்னுடைய சீடர்களான உச்சார நாச்சாரியார், குண்டகு

தோசாரியார், பத்தும நந்தி ஆசாரியார், சியாம குண்டாசாரியார் ஆகிய நான்கு பேருடன் சமயப் பணி செய்கிறார். இவற்றிற்குப் பிறகு தும்புர புறத்தில் தும்புராச்சாரியார் மற்றும் சமந்த பத்திராச்சாரியாரும், கலி கிராமத்தில் சமந்த பத்திராச்சாரியார் மற்றும் வீரநந்தி ஆச்சாரியாரும் சமயப் பணி செய்கின்றனர்.

சித்திர கூடபுரத்தில் வல்லி கிராமத்தில் தேவராசாரியார் தம்முடைய சீடர்களான ஏலாசாரியார், வீரசேனாசாரியார், சின சேனாசாரியார் ஆகியோருடன் சமயப் பணி செய்கின்றார். இப்பணி சீடர் வழிச் சீடர்களால் சில ஆண்டுகாலம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. அப்போது கலியுக ஆண்டு 50611-ஆக இருந்தது. மேலும் கோபதமதில் ஆண்டு 8020 ஆக இருக்கிறது. இக்காலத்தில் செல்வ சேபங்காபுரத்தில் ஜயிந ராசர் நீண்ட நாட்கள் வாழ்ந்து சமயப்பணி செய்து வருகிறார். இவருடைய காலத்திலேயே இவரின் குருவான சின சேனாசாரியார் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்கக்கூடிய வகையில் சமணத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட மஹாபுராணம் எனும் நூலை இயற்றுகிறார். இந்நூலினை மூலமாகக்கொண்டு நான்கு கணத்து (நான்கு கணம் எதுவரை எனக் குறிக்கப்படவில்லை எவை என குறிப்பிடப்படவில்லை) ஆசாரியார்களும் இதுவரைக்கும் சமயப்பணி செய்து வருகிறார்கள்.

இதற்குப் பின்பு சிஷிய நந்தியார் தன் சீடர்களான ராம சேனாசாரியார், சீன சந்திரா சாரியார், சந்திரா சாரியார், பிரபாவ சந்திரா சாரியார், வாசவ சந்திராச்சாரியார், பால

சந்திராச்சாரியார், மேக சந்திராச்சாரியார் ஆகிய இவ்வேழு பேரும் சில (ஆண்டுகள்) நாட்கள் சமயப் பணி செய்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்பு சர்வ பூத ஹித பட்டர்களாகிய திரிபுவன சுயம்பூ பட்டர்கள், சுறத சாகறப் பட்டர்கள், சமாதி குப்பத்தி பட்டர்கள், சிவ குபத்தி பட்டர்கள், சிவ குமத்த பட்டர்கள் ஆகிய ஐவரும் சிறிது நாட்கள் சமயப் பணி செய்து வந்தார்கள். இவர்கள் இப்படிப் பண்ணிவந்த நாட்களில் இவர்களின் சீடர்களாகிய சம்பந்த பத்திர சுவாமி, சிவ கோடி சுவாமி, பூச்சிய பாத சுவாமி, அகளங்க சுவாமி, நிஷ்களங்க சுவாமி, அனந்த வீயக சுவாமி, வித்தியானந்த சுவாமி, கவிபந்த மேஷிட ஸ்வாமி, வர்த்தமான சுவாமி, குணபத்திர சுவாமி ஆகிய பதினோரு பேரும் சீடர் வழிச் சீடர்களாய் சமயப் பணி செய்து வந்தனர். அப்பொழுது சகாப்தம் 40218 சென்றபோது தேசத்தில் சண்டைகள், கலவரங்கள் அதிகமான காரணத்தினால் மக்கள் அனைவரும் புலம் பெயர்ந்து வேறு தேசங்களுக்குச் சென்றனர். எஞ்சிய சிறிய அளவிலான மக்களே இத்தேசத்திலிருந்தார்கள். இக்காலகட்டத்தில் வாழ்ந்த ஆச்சாரியார் ஒருவர் எஞ்சியிருக்கின்ற மக்களுக்கு உபதேசம் செய்தவற்காக ஒரு சீடரைத் தாயனூர் மடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு மேற்கே சென்றுவிடுகிறார்.

நீண்ட காலம் கடந்த பின்பு இவ்விடத்திலே மக்களுக்கு - உபதேசம் செய்வதற்கு எவரும் இல்லாத காரணத்தினால் மேற்கிலிருந்து வீர சேனாசாரியார் என்கிறவர் இங்கு வந்து சித்தாமூர் மடத்தில் தங்கியிருந்து உபதேசம் செய்து கொண்டு வந்தார். இவரின் சீடர்

சந்ததிகள் தற்போது வரையில் மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டு வருகிறார்கள். இது சகாப்தம் 70318-க்கு மேல் தாது வருடம் மார்கழி மாதம் 172 பதினேழாந்தேதி எழுதிக் கொடுத்தது கைபீது என இறுதியாக முடிகின்றது.

இவ்வாறு ஜைன முனிவர்களுடைய வரலாற்றைப் பேசுகின்ற இச்சுவடியில் எழுபத்து நான்கு ஜைன முனிவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நான்கு சங்கங்கள் பற்றியும் பத்து ஊர்கள் பற்றியும் இரண்டு தேசங்களின் பெயரும், இரண்டு மடங்களின் பெயரும் இதில் இடம்பெற்றுள்ளது. இவற்றுடன் சந்திரகவாட குகை என்ற குகையைப் பற்றிய குறிப்பும் உள்ளது.

இப்பதிப்பேட்டின் மூன்றாவது பகுதியாக அமைகின்ற "செங்கணாச்சேரி காட்டு மனிதர் வரலாறு" எனும் சுவடி சபரி மலைப் பகுதிகளில் வாழ்கின்ற குறிப்பிட்ட ஒரு இனக்குழு மரபு குறித்துப் பேசுவதாக அமைந்துள்ளது.

சபரி மலைப்பகுதிகளில் வாழும் இவர்கள் தங்களிலிருந்து உருவத்தில் மாறுபட்ட வேறு மனிதர்களைக் கண்டால் பேசாமல் ஒதுங்கிக் கொள்வதாக இதில் கூறப்படுள்ளது. மேலும் இவர்களுடைய உடம்பு பருத்தும் நீண்ட மயிருடனும் குள்ளமாகவும் காணப்படுகின்ற இவர்கள் கரடி மனிதர்கள் எனப் பிற இனக்குழுவினரால் வழங்கப் பட்டுள்ளனர். மலைச் சரிவுகளிலும் பாறையிடுக் குகளிலும் வாழ்ந்த இவர்கள்

தேனையும் கிழங்கையும் உணவாகக் கொண்டு இடையில் மட்டும் (ஆண் பெண் இருவரும்) ஆடை உடுத்தி வாழ்ந்துள்ளனர்.

சபரி மலைப் பகுதியில் கேரள மக்களால் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும் மகரவிளக்குப் பூசைக்கு மக்கள் திரளாகச் செல்லும்போது அதனை இவர்கள் நீண்ட தூரத்திலிருந்து வேடிக்கை பார்ப்பதை வழக்கமாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். அவர்களில் ஆண், பெண் யார் என்பதை அவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டே அறிய முடிந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இவர்கள் மலைப்பகுதிகளில் வாழும் வேறு இனக்குழு மரபினருடன் தேன், மெழுகு முதலானவைகளைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் புகையிலையைப் பெறுவதையும் வழக்கமாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். இவ்வினக்குழு மரபினரில் ஒருசிலர் ஏலக்காய் முதலானவைகளைக் கொடுத்து பிற பொருள்களைப் பெற்றமையைச் சபரி மலையில் விளக்கேற்றும் பணியினைச் செய்த நாயர்கள் கூறக் கேள்விப்பட்டதுண்டு எனச் சுவடி முடிகின்றது.

இச்சுவடியில் காட்டு மனிதர்கள் குறித்த இத்தகவல்கள் தவிர வேறு எதுவும் கூறப்படவில்லை. எனவே இவர்கள் குறித்த அடுத்தகட்ட ஆய்விற்கு இச்சுவடி பயன்படும் என்பதால் இது பதிப்பிக்கப் படுகிறது.

# 1. தாய்மான் நள்ளிச் சோழன் என்ற முதற்சோழன் வரலாறு

சோழ மண்டலத்தை உண்டு பண்ணின தாய்மான் நள்ளிச் சோழனென்று பேர் பெற்ற முதல் சோழ ராஜாவினுடைய மகா விஷேசித்த கைபீது.

வெகு பூர்வீகமான காலத்திலே பாண்டிய மண்டலம், சோழ மண்டலம், சேரமண்டலம் என்று பேர் உடைத்தாகிய இந்த மூன்று மண்டலமும் ஏகாரண்யமாய் இருந்தது. இதில் மகா பலசாலி யாகிய தெண்டகன் என்கிற ஒரு இராட்சதன் இருந்தபடியினாலே இந்த மூன்று மண்டலமும் தெண்டகாரண்ய மென்று அழைக்கப்பட்டிருந்தது. முதல் (பூ) - ராமராகப்பட்டவர் ராமேஸ்வரமென்கிற யிடத்திலே லிங்க பிரதிஷ்டைபண்ணி அதைக் குறித்து தாம் பண்ணின ஸ்தள மகுத்துவத்தை வடதேசத்திலெங்கும் பிரபலம் பண்ணின படியினாலே வட தேசத்திலிருக்கிற சில அந்தஸ் துள்ள மனுஷாளும் சில ராஜாக்களும் இந்த சேது ஸ்தானத்துக்கு வரயேவி எழுப்பப்பட்டார்கள். அவாளில் பாண்டிய ராஜாவானவன் சேது

ஸ்தானத்துக்கு வந்து அந்த ராமேஸுரத்துக்கு கடுத்த முதல் பங்கு மகா நல்ல நிலமாயிருக் கிறதைக் கண்டு காடு வேப்டி (வெட்டி) தன் சீமை மனுஷாளை அழைப்பித்து குடியேத்தி வைத்து புதுசாய் தேச முண்டு பண்ணி அதுக்கு தன் பேராலே பாண்டிய மண்டலமென்று பேர் கொடுத்தான். இந்த சமாசாரம் வடதேசத்தில் பிரபலிக்கும்போது சோழ வமிசத்தாரில் ஒருவனாகிய தாய் மா னள்ளிச் சோழ ராசா சேது ஸ்தானத்துக்கு வரவேணு மென்கிற பக்தி வைராக்கியத்தினாலே கொஞ்சத்தளங்களுடனே அவன் அயோத்தியா புரிக்கி சமீபத்தில் ஆண்டுக் கொண்டிருந்த தன்னுடைய சின்ன தேசத்தை விட்டுப் புறப்பட்டு சேது யாத்திரையின் பேரில் வருகிறபோது யின்னம் தெண்டகாரண்ணியமாயிருந்த யிந்த ரெண்டானபங்கின் வழியாய் வந்தான்.

அவன் வந்த போது யிந்த காடாயிருக்கிற பூமியைப் பார்த்து - யிந்தப் பூமி தன் பூமியைப்பார்க்க நலமாயிருக் கிறத்தினாலும் தானாளுகிற பூமி கொஞ்சமாயிருக் கிறதினாலும் தானிருந்த காட்டை

யழித்து ராஜ்ஜிய முண்டாக்க வேணு மென்று நினைத்துக் கொண்டு ஆனால் - தனது முதல் நோக்கத்தை நிரவேத்து மென்கிற வையிராக்கியத் துடனே ராமேஸ்வரத்துக்குப் போய் சேது ஸ்தானத்தை முடித்துக் கொண்டு பாண்டிய மண்டலத்தின் பேரில் வந்து அதன் செழிப்பான சீர் நிர்வாகத்தைப் பார்த்து பிரமித்து தனக்கும் தன் வமிசத்தாருக்கும் இப்படி போலொற்ற ராஜியமும் பேரும் கீர்த்தியும் சம்பாதிக்க வேணு மென்கிற உறுதியான நோக்கத்துடனே இந்த தொண்டகா ரண்ணியத்தின் ரெண்டானபங்கின் பேரில் திரும்பவும் வந்து தான் நடப்பிக்க வேண்டியதுகளைபார்த்து திட்டமாய்க் குறித்துக் கொண்டு தன் சொந்த பிறந்தகமாகிய வடதேசத்துக்குத் திரும்பிப் போய் அவ்விடத்தில் தன் சொந்த வேலைக்காரர்களையும் குடியானவர் களையும் இன்னும் அனேக ஜனங்களையும் விசேஷமாக தன் சொந்த பந்துக்களாகிய சோழியரையும் அவாள் புரோகிதராகிய சோழிய பாப்பார் முதலானவர் களையும் அழைப்பித்துக் கொண்டு - யிப்போ -

திருச்சிறாபள்ளி யென்று சொல்லுகிற பட்டணத்துக் குள்ளிருக்கிற மலையோரத்தில் வந்திறங்கினான்.

அந்தக் காலத்திலே அந்த மலையைச் சுற்றிலுமிருந்த யெடங்களெல்லாம் முழுதும் பலத்த காடாயிருந்தது. அந்த மலையின் பேரிலே திரிசிரசு யென்று பலத்த ராக்ஷதனிருந்தான். அப்போ அந்த சோழ ராஜாவாகப் பட்டவன் - தனக்கு ராஜதானிப்பட்டணம் உண்டுபண்ணுகிறதுக்கு யிது தகுமான யிட மென்றறிந்து அந்த மலையைச் சுற்றியிருந்த பலத்தகாடுகளெல்லாம் வெட்டி வெளியாக்கி தன் பிறகே வந்த ஜனங்களை அதில் குடியேற்றி வைத்து ராஜதானிப்பட்டணமாக்கி அந்தப் பட்டணத்து முன் அந்த மலையின் பேரிலிருந்த திரிசிரசு யென்கிற ராக்ஷதனுடைய பேரைதரித்து அந்தப் பட்டணத்தை திரிசிரபுரம் என்றழைத்தான். மேலும் அந்த மலையின் பேரிலே தன் பேராலே ஒரு லிங்கம் பிரதிஷ்டை பண்ணி அதுக்கு தன் நாமத்தைத் தரித்து தாய்மான லிங்கமென்றும் தாயமான சுவாமி யென்றும் அழைத்து அந்த மலையின் பேரிலே அதுக்கு ஒரு கோவிலும் கட்டி வைத்தான் -

மேல் ராஜதானிப்பட்டணமான பிற்பாடு இதற்கு தேசம் வேணுமென்கிற நிமிர்த்தியார்த்தம் மேற்கே துவங்கி கிழக்கே கடலோர மட்டுக்கும் காடெல்லாம் வெட்டி தேசமாக்க வேணு மென்றும் மேற்கே மலையிருக்கிறமட்டும் நாலு பக்கத்திலும் ராஜியம் சமனாயுண்டாக்க வேணு மென்று நினைத்து - தாய் மா னள்ளி - யென்கிற சோழ ராஜா - தன் ஜனங்களுக்கு அடியில் சொல்லப்படுகிற பிரகாரம் சட்டங்கள் ஏற்படுத்தினான். அதுக ளெப்படியென்றால் - (பூ) காடுவெட்டி ராஜிய முண்டு பண்ணுகிறது முதலாம் - வருஷம் தோக்கி (துவங்கி) ஆறு வருஷ மட்டுக்கும் குடியானவர்கள் தங்கள் பயிரின் பலனை சர்வமானியமாய்ப் பயிரிட்டெடுத்து - கொள்ளுகிறது. அப்புறம் தனக்கு பத்து பங்கில் ஒரு பங்கு தனக்கு பகிர்ந்து கொடுக்கிறது - மறு வருஷம் ஒன்பதில் () ஒரு பங்கு பகுதி கொடுக்கிறது. மறு வருஷம் யெட்டிலொரு பங்கு பகுதி கொடுக்கிறது - கடையில் என்றன் றைக்கும் ஆறுபங்கில் ஒருபங்கு பகுதி கொடுக்கிறது. இந்தப்படி சட்டங்கள் பண்ணி...

ஆராக்ஷி மணி கட்டிவைத்தான். இந்த சட்டத்தினாலே ஜனங்கள் பலாசையாயி காடுகளை வெட்டி நாடுகள் ஊருகள் பட்டணங்கள் உண்டு பண்ணினார்கள்.

அப்போ சோழராஜவானவன் புதுதாய் உண்டு பண்ணின யிடங்களை யெல்லாம் வந்து சுற்றிப் பார்த்து சிலதுகளுக்குத் தான் பேரு கொடுத்தான். பொதுவிலே தன் வம்ச னாமத்தை கொண்டு சோழ மண்டல மென்று பேர் தரிவிச்சான். யிதுவே னறியாலே குடிகளை சாக்கிரதையா யிருக்கும் படிக்கு போதித்து யெழுதி விட்டான். இப்பவும் இந்த தேசத்துக்கு உதவியாயி...காவேரி ... அக்காலத்திலே காட்டுவெள்ளாறு யென்கிற பேரை கொண்டிருந்தது.

மேற்கேயிருந்து கிழக்கே கொஞ்ச தூரம் மட்டும் ஓடி வந்து அந்த தேசத்துக்கு உபயோக மில்லாமல் முழுதும் கொள்ளடத்திலே போய் விழுந்து சமுத்திரம் போய்ச் சேர்ந்து போம். இந்த சோழ ராசா- இந்த ஆற்றை தேசத்துக்கு நடுவாக கொண்டு வந்து சமுத்திர கரை மட்டும் ஆறு வெட்டவும் இந்த தேசத்துக்குப் பாய்ந்த தண்ணீர்

போக மீதியான தண்ணீர் கடலில் போய் சேரப் போகிறது. என்ன பிரயாசை யெடுத்தாலும் நடவாமல் போச்சு. இவன் வடதேசத்திலிருந்து வருகிறபோது 32 வயது. அத்தோடே 86 வயதிருந்து ராஜிய பரிபாலனம் பண்ணி அவனிருக்கிற நாள்களில் புதுசான திட்டவட்டங்களைச் செய்து தன் காலங்களை சிலவழி யிருகாலம் பண்ணிப் போனான். அவனுக்கு ஒரு ஆண்பிள்ளை. அவன் பேர் விண சோழன் இவன் கால்வழி பேதன்போல விண்ணாரை வெட்டி வைத்தான் -

தன் தகப்பனைப் பார்க்க அதிக புத்திசாலியான படியால் - தகப்பன் காவேரி யாற்றுத் தண்ணீர் - கொள்ளிடத்துக்குப் போகாமல் அடைத்து தேசத்திலெங்கும் தண்ணீர் பாயவேண்டுமென்று நினைத்தது மோசமென்றும் அப்படி செய்தால் தேசமெல்லாம் வெள்ளக் காடாக போகுமென்றும் நினைத்து அந்தக் காவேரி மேன் தண்ணீரை முதல் இந்த விண்ணாற்றில் விட்டு இதனாலே சில

சீர்மைகளுக்குப் பாய்ப் பண்ணி மேல் கிழக் கெல்லை தூரத்தேயும் தேசத்தின் அகல விஸ்தீர்ணத்தையும் அளந்து யோகிறறரிந்து இவ்வளவு தண்ணீர் தேசத்துக்குப் போது மென்றறிந்து மேன் தண்ணீர் போகும்படியான அணைப் போட்டு வைத்தான் - இவன் தேசத்தை அளந்து கண்டவனானபடியினாலே மண்ணளந்த சோழன் என்று பேர் பெற்றான். இவன் எண்பதாவது வயதிருந்து காலம் பண்ணினான். இவனுக்கு ஒருபிள்ளை. அவன் பேர் காவேரிச் சோழன். இவன் இந்தக் காவேரி ஆற்றை சமுத்திரக்கரை மட்டும் வெட்டி விட்டபடியினாலே காவேரி கரை கண்ட சோழன் என்று பேர் வந்தது.

## குறிப்பு

இத்தாள் சுவடி N. நாராயணசுவாமிப் பிள்ளை அவர்களால் 7.7.1969-இல் D. 3079-ஆம் எண்ணிலிருந்து படியெடுக்கப்பட்டு M.D. ஆராவமுதன் அவர்களால் ஒப்புநோக்கப்பட்டது.

# 2. ஜைன முனிவர்கள் சந்ததி வரலாறு

## 17.04.38 ஜயநிய முனிவர்கள் சந்ததி வயணம்

இப்போது சகல ஜயினனாலும் அதிகமாய் அங்கீகாரம் பண்ணப்படுகிற பூர்வீக பிறபல ஜைன முனீஸ்வரர்களுடைய மகர விசேஷித்த கைபீத்து...

இப்போ சகல ஜயினனாலும் அதிகமாய்ங் கீகாரம் பண்ணப்படுகிற பூர்வீக பிறபல ஜைன முனீஸ்வரர்களுடைய விசேஷித்த கைபீத்து.

முனீஸ்வரர்களுடைய சந்ததி வயணம். வர்த்தமான சுவாமி முக்த்தி அடைந்த பின்பு கலியுகம் பிறந்தது...

அந்தயுக ஆதியில், அவர் சீஷர் கெவுதமர் வருஷம் (12 அல்லது 102) யஉ.... அதற்குப்பின் சதர்ம்மர் வருஷம் யஉ அவர் (சீஷர்) ஜம்பூநாமர் வருஷம் - 314 () ஆக வருஷம் 612 (சாயஉ) - இவர்கள் மூவரும் தர்மோப தேசஞ் செய்து முக்த்தி

அடைந்தபின் அவர் சிஷ்யர்... விஷ்ணு முனி, னந்தி மித்திறா, அபறாஜிதா, கோவர்த்தனா, பத்திரபாகு. - இவர் அயிவர்க்கும் வருஷம் நூறு (ள) ....

உபதேசம் செய்தார்கள் அதற்குப்பின் அவர் சீஷர் சந்ததிகள் ... விசாலர் - புறோஷிடலாச்சரியர் - க்ஷத்திரிய ஜெயசா சூவயந - நாகசென சித்தார்த்தா - திறதி ஷெண விஜெயர் - புத்திமான கங்க தேவர் ... தரும சேனர் - இவாள் பதினொரு பேரும் - ளஅங (183) வருஷம் தரும உபதேசஞ் செய்தார்கள் அதற்குப்பின் அவர் சீஷர் சந்ததிகளாவது ...

நக்ஷேத்திற நாமர் - ஜெயபாலர் - பாண்டு திர்வசேனர் - கம்சர் - இவர்கள் ஐவர்களும் - உளஉய (2020) வருஷம் தர்மோபதேசம் செய்தார்கள். அதற்குப்பின் அவர்கர் சீஷர் சந்ததிகளாவது - சுபத்திரர் - யசோபத்திரர் - பத்திரபாகு - லோகாசாரியர் - இவாள் நாலுபேரும் ளயசு (114) வருஷம் தர்மோப தேசம் செய்தார்கள்...

ஆகக்கலியுகத்தில் வருஷம் சாளசுயங (60413) சென்றபின் - அவர் சிஷியர் சந்ததிகள் -

வன்னியந்தறர் - ஸ்ரீதேத்தர் - இவதேத்தர் - அரிய தேத்தர் இவர்கள் முதலாகிய சிஷயப் பிறதி சிஷியர் முதலாகிய சிறிது யிடம் உபதேசஞ் செய்து வந்தபின் புண்டரவர்த்தன - உர்த்திவ பத்திறபாகு ஆசாரியருடைய சிஷியர் அருகபெலி ஆசாரியர் - தம்முடைய புத்தி விசேஷத்தினால் இனிமேல் கலியுகம் பிறக்கிற தினத்தில் சிஷிய சாம்பிறதாய் துரு ஆசாரங்களிலே விரோதம் வரப்போகிறதென்று நிச்சயித்து உத்தஞ்சார் ...

**பூர்வ ஸ்ரீ மூல சங்கம் - ததநுஸி தபட ஆசவி சங்க ஏவம் ஸங்கோபூத் திராவிடாக்யோ புனரஜனி ததஹி சாட்டசங்கஸ் ததா நீம். தஸ்மின் ஸ்ரீமூலசங்கே முனிகண நிவஹே சேனநந்தீ ச சங்கௌ ஸ்யாதாம் ஸிம்ஹாக்ய சங்கோ பவதி புவி ததா வீர சங்கஹ சதுர்த்தஹி!**

இப்படி செனன சங்கம், வீரசங்கம், நந்தி சங்கம், தேவ சங்க மென்று நாலு சங்கம் ஏற்படுத்தி இந்த நாலு சங்கத்துக்கும் நாலு சிஷியரை நாலு ஞ்சாரியராக ஒவ்வொரு ஆச்சாரியருக்கு நாலு சிம்மாசனம் நாலு யிடத்தில் ஏற்படுத்தி ஜனங்களுக்கு

தர்மோபதேசம் செய்யும்படிக்கு ஆக்கியாபித்தார்... அவர் சிஷியர் மா...னந்தாசாரியர். அற்றாஷ்ட தேசத்து கிரிநகர் புறத்து ஊர்ச்சியந்தகிரி சந்திர கவாட குகையில் வாசம் பண்ணிக் கொண்டிருந் தார்கள்.

அவர் சிஷியர் தர்ம்ம சேனாசாரியர் - அவர் சிஷியர் சந்திரகள புஷ்ப தேத்தா சாரியர் பூதபலி ஆசாரியர் இவர்கள் மூவரும் வேறு தடாகபுரத்தில் வர சிஷியர்களுபாதேசத்தில் சினபாலித புரத்தில் யதி விஷமாநாரியர் அவர் சிஷியர் கருன தேசத்தில் சினபா நித புரத்தில் உச்சார நாச்சாரியர் - குண்டகு தோசாரியர் பத்தும னந்தி ஆசாரியர் சியாம குண்டாசாரியர் அதின் பிறகு தும்புரபுரத்தில் தும்புராச்சாரியர் - சமந்த பத்திரா பத்திராசாரியர் சமந்த பத்திராசாரியர் அதற்குபின் கலி கிளமத்தில் சமந்த பத்திராசாரியர் வீரநந்தி ஆசாரியர் அதற்கு பின் வல்லி கிராமத்தில் பெறம்பற தேவராசாரியர் சித்திரகூடபுரத்தில் ஏளாசாரியர் வீர சேனாசாரியர் - சின சேனாசாரியர் இவர் அனைவரும் சிஷியப் பிற சிஷியராய் தருமோப தேசம் செய்து வருகையில்

அப்போ கலியுகம் வருஷம் - சத ருள சாயக (50611) கோபத மதில் வருஷம் (8020) அளஉய செல்வ சேபங்காபுரத்திலே) புரத்திலே ஜயிந ராசர் - அமோக வருஷம் ராச்சியம் செய்தார். அவருக்குக் குருவாகிய சின சேனாசாரியர் பூர்வர் விஸ்தாரமான கிரந்த கால க்ஷேமமாயி சங்கிறாகிச்சு மஹாபுராணமென்று புராணம் செய்து இளசாவுக்கு உபதேசம் செய்தார்.

அந்த மகாபுராணம் ஜயின சங்கத்து நாலு கணத்து ஆச்சாரியர்களும் இதுவரைக்கும் உபதேசம் செய்து கொண்டு வருகிறார்கள்.

அதற்குப்பிறகால ஜினன சேனாசாரியருக்குப் பிற்காலம் சிஷியப்பிற சிஷிய நந்தியார் - றாம சேனாசாரியர். சீன சந்திராசாரியர் - நேமி சந்திராச் சாரியர் - பிறபாவ சந்திராசாரியார் - வாசவ சந்திராசாரியர் - பால சந்திராசாரியர் - மேக சந்திராசாரியர் இவர்கள் ஏழுபேரும் சிறிதுநாள் பாறம் பரியோப தேசத்தைப் பண்ணிக் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு அவர் சிஷியர் பிரதி சிஷிய சந்ததிகள், சர்வ பூத ஹித பட்டர்கள், திரிபுவன

சுயம்பூ பட்டர்கள் சுறத சாகறப் பட்டர்கள், சமாதி குப்பத்தி பட்டர்கள், சிவ குபத்தி பட்டர்கள், சிவ குமத்த பட்டர்கள் இவர்கள் ஐவரும் சிறிது நாள் தருமோப தேசம் செய்துவந்தார்கள்.

இவர்கள் இப்படி பண்ணி வந்தநாளையில் இவர்கள் சிஷியர்: சம்பந்த பத்திர சுவாமி - சிவ கோடி சுவாமி - பூச்சிய பாத சுவாமி - அகளங்க சுவாமி - நிஷ்களங்க சுவாமி - அனந்த வீயக சுவாமி வித்தியானந்த சுவாமி - கவிபந்த மேஷிட ஸ்வாமி வர்த்தமான சுவாமி - குணபத்திர சுவாமி இவர்கள் பதினோரு பேரும் சிஷியப் பிரிதி சிஷியர்களாய் தருமோப தேசம் செய்து வந்தார்கள். அப்போ சகாப்தம் சத சள உயஅ (40218) செல்லச்சே இந்தப் பிரதேசத்தில் கலாபங்கள் மேலிட்டு அந்த கலாபத்தில் செனங்கள் நினைக்க மாட்டாமல் தேசம் விட்டுப் போய்விட்டார்கள். சிறிது ஜனமிருந்தார்கள் அப்போ யிருந்த ஆச்சாரியர் இந்த செனங்களுக்கு உபதேசம் நடக்கும் படியாய் ஒரு சிஷியரை தாயனூர் மடத்தில் வைத்துப் போட்டு மேற்குப்

போய்விட்டார். அந்த சிஷியாசாரியரும் சிறிது நாள் உபதேசம் செய்து காலம்சென்று போய்விட்டார். பிறகு கலாபம் சொஸ்தமான பிறகு இவ்விடத்திலே உபதேசமில்லாத ஜனங்களுக்கு உபதேசம் பண்ண வேண்டியதர்க்கு மேற்கேயிருந்து வீர சேனாசாரியர் என்கிறவர் இவ்விடத்திற்கு வந்து சித்தாமூர் மடத்தில் இருந்து கொண்டு ஜனங்களுக்கு தர்மோபதேசம் செய்து கொண்டு வந்தார்...

அவர் சிஷியர் சந்ததிகள் இதுவரைக்கும் உபதேசம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இது சசாப்தம் சத எனஙயஅ (70318)- க்கு மேல் தாது வருஷம் மார்கழி மாதம் யஎஉ பதினேழாந் தேதி எழுதிக் கொடுத்த கைபீது.

ஜைன முனிவர் சந்ததி வரலாறு.

குறிப்பு

இத்தாள் சுவடி N. நாராயணசுவாமிப் பிள்ளை, .... ஆகிய இருவராலும் 18.8.1963 அன்று ஒப்பு நோக்கப்பட்டு பிரதி செய்யப்பட்டது.

# 3. செங்கனாச்சேரி காட்டு மனிதர் வரலாறு

**செங்கனாச்சேரி**

மண்டபத்தும் வாதுக்கலுக்கு சேந்த புதுப்பள்ளி பிறவந்திக்காறரும் மபிளன் கறடி மனுஷரை செவரிமலைக்கி மகர விளக்குக்கு கய (90) ஆண்டு.

சவரி மலைக்கிப் போகும் வழியிலும் கேட்டிருந்தும் - புதுப்பள்ளி பிறவந்திருமன் பின்னகண்டிருக்கு ரெண்ணனும் அழுதயாற் ... நீலிமலை யேத்தத்தில் கண்டுள்ளதென்ற ... காட்டு மனுஷற் வரலாற்...

மனஷரைக் கண்டால் பேசறதுயில்லை. கருப்பும் உடம்புல் யெத்தமும் மயிரும் குட்டையாகவும் குள்ளமாகவும் வயற்பெருத்தும் யிருக்கப்பட்ட மனுஷற். அவர்களுக்கொ கறடி மனுஷரென்று சொல்லப்படுகிறது. ஷை (மேற்படி) அவாள் மலை சரிவுகளில் பாரையிடுக்களிலிருப் பார்களாம். தேனும் கிழங்கும் தின்றதும் அறயாஞ்சலி உடுக்குறதும் போத்துக்கொள்ளு குறதும் யென்று சொல்லுகுறார்கள்.

மகரவிளக்குக்கு சனங்கள் போறபோது சனங்களைக் கண்டு மெறண்டு - மாற தூறத்தில் பாத்துக் கொண்டிருப்பார்கள். ஆண் யென்றும் பெண் யென்றும் தெரியாது. ஆனால் மாரைக் (மார்பு) கண்டு சூட்சமாக அரியவேணும். கிட்ட வாறதும் யில்லை. மனுஷருடன் பேசுறதுமில்லை. ஒரே வழியாக குள்ளமாகவும் வயற் பெருத்தும் மயிற் வளந்து மிருக்கிறார்கள். மலையறயன்மாற் காணுவாற்களாம். குறவனும் காணுவாற்களாம். தேன் மெழுகு யிவகை கொடுக்குறதும் புகையிலை வாங்குறதும் உண்டாம். ஆனால் கொப்பாற கலிமல் அறயன்மாற் யாரும் னாங்கள் காணோமென்று சொன்னாற்கள். ஆனால் ஒத்த குறவன் ஏலக்காயி குடுக்கிறவனுண்டுயென்று விளக்கு வயிப்பு னாயற் சொல்லி கேழ்க்கப்பட்டது.

# பின்னிணைப்பு - 1

**ஊர்கள்**

1. கிரி நகர் புரம்
2. சியந்த கிரி
3. தடாக புரம்
4. சினபாவித புரம்
5. சினபாநித புரம்
6. தும்பர புறம்
7. கலி கிராமம்
8. வல்லி கிராமம்
9. சித்திரக் கூட புரம்
10. சேபங்கா புரம்

**புராணக் குறிப்பு**

மஹாபுராணம் என்ற புராணத்தை சினசேனா சாரியார் இயற்றியதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

**குகை**

சந்திர காவட குகை என்ற குகை பற்றி குறிப்பு உள்ளது.

**தேசங்கள்**

கருண தேசம்

அற்றாஷ்ட தேசம்

**மடங்கள்**

1. தாயனூர் மடம்

2. சித்தாமூர் மடம்

**74 ஜைன முனிவர்கள்**

1 அகளங்க சுவாமி

2 அபறாஜிதா

3 அருகபெலி ஆசாரியார்

4 அனந்த வீயக சுவாமி

5 ஆரிய தேத்தர்

6 இவதேத்தர்

7 உச்சாற் நாச்சியர்

8 உர்த்திவ பத்திரபாகு ஆசாரியார்

9 ஏலா சாரியார்

10 கம்சர்

11 கவிபந்த மேஷிட ஸ்வாமி

12 குண்டரு தோசாரியார்

13 குணபத்திர சுவாமி

14 கௌதமர்

15 கோவர்த்தனா

16 சதர்ம்மர்

17 சந்திரகள புஷ்பர்

18 சம்பந்த பத்திர சுவாமி

19 சமந்த பத்திராச்சாரியார் (கலி கிராமம்)

20 சமந்த பத்திராச்சாரியார் (தும்புற புறம்)

21 சமாதி குப்பத்தி பட்டர்கள்

22 சியாம குண்டா சாரியார்

23 சிவ குபத்தி பட்டர்கள்

24 சிவ குபத்தி பட்டர்கள்

25 சிவ கோடி சுவாமி

26 சின சேனாசாரியார்

27 சிஷயர் நந்தியார்

28 சீன சந்திறா சாரியார்

29 சுபத்திரர்

30 சுறத சாகறப் பட்டர்கள்

31 தர்ம்ம சேனாசாரியார்

32 தரும சேனர்

33 திர்வ சேனர்

34 திரிப்புவன சுயம்பூ பட்டர்கள்

35 திறாதி ஷென விலகயர்

36 தும்புராச் சாரியார்

37 தேத்தா சாரியார்

38 தேவரா சாரியார்

39 நந்தி மித்திறா

40 நாகசென சித்தாந்தர்

41 நாம சேனாசாரியார்

42 நாஷேத்திற நாமர்

43 நிஷ்களங்க சுவாமி

44 நேமி சந்திராச் சாரியார்

45 பத்திரபாகு

46 பத்திரபாகு

47 பத்தும நந்தி ஆசாரியார்

48 பாண்டு

49 பால சந்திராச் சாரியார்

50 பிறபாவ சந்திராச் சாரியார்

51 புத்திமான கங்க தேவர்

52 புரோஷிட லாச்சாரியார்

53 பூச்சிய பாத சுவாமி

54 பூதபனி ஆசாரியார்

55 மா...னந்தா ஆசாரியர்

56 மேக சந்திராச் சாரியார்

57 யசோபத்திரர்

58 யதிவிஷமா நாரியார்

59 லோகாசாரியார்

60 வர்த்தமான சுவாமி

61 வன்னியந்தறர்

62 வாசவ சந்திராச் சாரியார்

63 விசாலர்

64 வித்தியானந்த சுவாமி

65 விஷ்னு முனி

66 வீர சேனாசாரியார்

67 வீர சேனாசாரியார்.

68 வீரநந்தி ஆசாரியார்

69 ஜம்பூ நாமர்

70 ஜயிந ராசர்

71 ஜினன சேனாசாரியர்

72 ஜெய பாலர்

73 ஷத்திரிய ஜெயசா வயநர்

74 ஸ்ரீதேத்தர்

# பார்வை நூல்கள்

1. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1973.
2. முனைவர் சு. சௌந்தர பாண்டியன் (ப.ஆ), சோழ மண்டல வரலாறுகள், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை 05, 1999.
3. ந. சுப்ரமணியன், தமிழக வரலாறு கி.பி. 1565, என்னெஸ் பப்ளிகேஷன்ஸ்., மதுரை, 1982.
4. பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார், சோழர் சரித்திரம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை 14, 2006.
5. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் -2, இந்தியன் கவுன்ஸில் ஆப் ஹிஸ்டாரிஸ் ரிசர்ச், நியூதில்லி மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெக் சென்னை 1989.
6. கே.கே. பிள்ளை , தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, 2007.